## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(31.08.2022 முதல் 04.09.2022)

**அறிக்கை எண்: 69/2022** **தேதி: 30.08.2022**

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 33 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (31.08.2022 முதல் 04.09.2022)

| கடந்த வார வானிலை (26.08.2022 முதல் 29.08.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (31.08.2022 முதல் 04.09.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 26/08 | நாள்-2 27/08 | நாள்-3 28/08 | நாள்-4 29/08 | தேதி | நாள்-1 31/08 | நாள்-2 01/09 | நாள்-3 02/09 | நாள்-4 03/09 | நாள்-5 04/09 |
| 11.9 | 0.6 | 5.7 | 2.4 | மழை (மி.மீ.) | 3 | 4 | 4 | 4 | 12 |
| 34 | 32 | 34 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 24 | 25 | 24 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 26 | 26 | 26 | 26 |
| 5 | 7 | 5 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 7 | 6 | 6 | 8 |
| 89-75 | 86-74 | 78-72 | 83-73 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-50 | 70-50 | 70-50 | 70-50 |
| 5 | 6 | 6 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 8 | 12 |
| தெற்கு | மேற்கு | தென் தென் கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 31.08.2022 முதல் 04.09.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| | | பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும்/ தள்ளிபோடவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும். |
| நெல் | நாற்றாங்கால் | தற்போது நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

பயிர் வயல்களுக்கும் நெல் நாற்றாங்காலுக்கும் முறையான வடிகால் வசதி அமைத்து பயிர் மற்றும் நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும்.

**இயக்குநர்**